எனது உயிரினும் மேலான நமது சகோதரர்களே! சக்கிலியர் என்று தமிழகத்தில் அழைக்கப்படும் மக்களாகிய நாம் இந்திய வரலாற்றுப்படி சாளுக்கியர்கள். சாளுக்கியப் பேரரசில் போர் வீரர்களாக இருந்தவர்கள் நாம். சாளுக்கியப் பேரரசின் தென்னகப் படையெடுப்புகளில் போரில் சிறைபிடிக்கப்பட்டு அடிமையாக்கப்பட்டவர்கள் நாம். **நாம் சக்கிலியர் அல்ல. நாம் சாளுக்கியர்கள்-க்ஷத்திரியர்கள்-போர் வீரர்கள். சாளுக்கியர் என்ற வார்த்தையே மருவி சக்கிலியர் என்றாகிவிட்டது.** வடஇந்தியாவில் நமது மக்களை சமார் (chamar) என்று அழைக்கிறார்கள். சமர் என்பதற்கு போர் என்று அர்த்தம். இந்த சமர் என்ற வார்த்தையில் இருந்தே சமார் (chamar) உருவாகியது. **சமார் (chamar) என்பதற்கு யுத்த வீரர்கள் என்று அர்த்தம்.**

தமிழகத்தில் எத்தனையோ மன்னர்களுக்கு படைத் தளபதிகளாக இருந்துள்ளனர் நமது இனத்தவர். புலித் தேவனின் படைத்தளபதி ஒண்டிவீரன் பெகடை சக்கிலியர் இனத்தவரே. வீரபாண்டிய கட்டமொம்மனின் படைத்தளபதிகள் பொட்டி, கந்தன், முத்தான் சக்கிலியர் இனத்தவரே. நாயக்க அரசர்களின் படைத் தளபதி வீரன் (மதுரைவீரன்) சக்கிலியர் இனத்தவரே. தீரன் சின்னமலையின் படைத் தளபதி பொல்லான் சக்கிலியர் இனத்தவரே. சிவகங்கை ராணி வேலுநாச்சியாரின் படைத்தளபதி குயிலி சக்கிலியர் இனத்தவரே. வேறு எந்த ஜாதியிலும் - எந்த இனத்திலும் இப்படி படைத்தளபதிகள் இருந்தது இல்லை. நமது இனத்திலே மட்டும் உண்டு.

இவ்வளவு சக்தி படைத்த நாம் இன்று தாழ்த்தப்பட்டவராக நடத்தப்படுகிறோம். நீங்களும் உங்களது சக்தியை உணராமல் கூனிக்குறுகி வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் நிமிர்ந்து எழுந்தால் எரிமலையும் தூள்தூளாகும். பயந்து ஓடினால் எறும்புகளும் உங்களைப் பார்த்து சிரிக்கும். ஆடுகளைத்தான் பலியிடுகிறார்கள். சிங்கங்களை பலியிட முடியுமா? சுண்டெலிகளைப் போல் நூறு நாட்கள் வாழ்வதைக் காட்டிலும் சிங்கங்களைப் போல ஒரு நாள் வாழ்வதே மேல். அந்த ஒரு நாளும் நமது இனத்திற்காக வாழ வேண்டும். உங்கள் சக்தியை இந்த ஊரறிய, இந்த நாடறிய, உலகறிய நாம் அனைவரும் ஒரே கொடியின் கீழ் அணி திரள வேண்டும். **தற்போது நமது மக்கள் நான்கு பேர் சேர்ந்தால் ஒரு கட்சி ஒரு சங்கம் என்று சுற்றிக்கொண்டு இருக்கிறார்கள் கடந்த 50 ஆண்டுகளாக. இவர்களால் நமது மக்கள் எந்த எழுச்சியும் உயர்ச்சியும் பெறவில்லை.**

ஆதலினால் நான் நமது மக்களுக்காக நான் **Chamar Jan Sangharsh** என்ற ஒரு சமூக அமைப்பும் மற்றும் **We for Red India** என்ற ஒரு அரசியல் அமைப்பையும் கட்டமைக்கிறேன். அதற்காகவே இந்த நோட்டீஸ் வழங்கப்படுகிறது. நாம் ஒரே அணியில், ஒரே கொடியின் கீழ் திரளுவோம். ஓங்கட்டும் உங்கள் கைகள். உடையட்டும் உங்கள் அடிமை விலங்குகள். அதிரட்டும் இந்த பூமி. அதிரட்டும் அந்த வானம். காற்றும் அதிரட்டும். கடலும் அதிரட்டும். கட்சிகளும் அதிரட்டும். ஆட்சிகளும் அதிரட்டும். ஆட்சியாளர்களும் அதிரட்டும். மடியட்டும் ஜாதி வெறி மத வெறி. மலரட்டும் சமநீதி. ஒளிரட்டும் உங்கள் வாழ்வு.

*உங்கள் சகோதரன் சாளுக்கியன்*

**C.M. Raju** B.A., LL.B., Advocate.
No:5956/2023 - Tamilnadu Bar Council,
COP/2025/1500944 - All India Bar Council.
Chinniyampalayam Harijan Colony,
Kanjikovil (Po), Erode (Dt) – 638 116.
Cell No: 9976366399
whatts app No : 9976366399
email id: rajucm01041957@gmail.com
website : www. We for Red India
facebook : https://www.facebook.com-rajucm

